**தலைப்பு 411 – நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 நவம்பர் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்

கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கை இராஜாங்க அமைச்சு 2020 ஆண்டில் நிறுவப்பட்ட அமைச்சொன்றாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய தேவை காணப்படவில்லை. அதனால் மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்துள்ளது என கூற முடியாததுடன், முன்னைய ஆண்டு தொடர்பாக பரிந்துரை ஏதும் வழங்கியிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

பொதுநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 3.5 பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுத் தொகுதிகள் தயாரிக்கும் போது ஒவ்வொரு செலவு விடய குறியீட்டு எண்களின் கீழ் அனைத்து செலவு விடயங்களுக்காகவும் மொத்த தேறிய ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே வித்தியாசம் மற்றும் அந்த வித்தியாசத்திற்கான காரணம் ஏசீஏ – 2(ii) இல் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் இரண்டு செலவு விடயங்கள் அல்லது பல விடயங்களை ஒன்றாக குறிப்பிட்ட படிவத்தில் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காததுடன், சில ஆவணங்கள் முறைப் பிரகாரம் மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் அனைத்து பொறுப்புக்களையும் பதிவு செய்து பொறுப்புக்கள் பதிவேடு முறைப்பிரகாரம் மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. | உங்கள் அவதானிப்பின் படி எதிர்காலத்தில் இதற்காக ஒரு பதிவேடு பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் அடிக்கடி பரிசோதனை செய்யக்கூடிய விதமாக பொறுப்புக்கள் பதிவேடொன்றில் அந்த பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் சரியான தரவுகளை உள்ளடக்கிய வாகனப் பதிவேடு ஒன்று நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சின் கீழ் செயற்படும் மற்றும் செயற்பட்டு தற்போது மூடப்பட்டுள்ள செயற்திட்டங்களினால் பயன்படுத்தப்படும்/ பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பாக தகவல்கள் ஏதும் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் அவை அமைச்சின் வாகன அட்டவணையில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | தற்போது குறிப்பிட்ட பதிவேடு, செயற்திட்டங்களால் பெற்றுக்கொண்ட வாகனங்களை இனங்காணக்கூடிய விதமாக நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனங்களை பட்டியலிடும் பதிவேடு நாளதுவரை பேணப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வு அலகினால் வெளியிடப்படும் கணக்காய்வு அவதானிப்புகளின் படி பொருத்தமான நாளதுவரை ஆக்கல் முறைமையினை அபிவிருத்தி செய்தல் அமைச்சின் உத்தியோகத்தரினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆன் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 1.6.4 எல்லைகளை மிகைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு இலக்கம் 41101 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 4,200,000 தொகை எனினும், அமைச்சின் மூலம் ரூபா 3,999,074 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் குறைந்த பெறுவனவு எல்லையினை நெருங்கியிருக்கவில்லை. | தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் குறிப்பிட்ட எல்லைத் திருத்தங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கு விடயங்கள் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 மூலதனச் செலவு விடயங்கள் மற்றும் மீண்டுவரும் செலவு விடயம் ஒன்றிற்காக ஆண்டின் போது திட்டமிடப்பட்டவாறு திறைசேரியினால் கட்டுநிதி வழங்கப்பட்டிருக்காமையால் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,258,391,881 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | கட்டுநிதி திட்டமிடல் தத்துரூபமாக செயற்பட வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,050,000 தொகை மற்றும் மூலதனச் செலவு விடயம் 01 இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகை முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் சரியானது சேமிப்புக்களுக்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைகள் செலவு விடயத்தின் கீழ் பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 1,000,000 தொகையாக காணப்பட்டதுடன், நி.பி. 66 இன் மூலம் ரூபா 2,000,000 தொகையொன்று மாற்றப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2020 திசெம்பர் 31 திகதி குறைநிறப்பு மதிப்பீடொன்றின் மூலம் ரூபா 3,700,000 இற்கான தொகையொன்று பெறப்பட்டிருந்தது. எனினும், நி.பி. 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகை முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைகள் ஏற்படாமையால் அந்தத் தொகை சேமிக்கப்பட்டது. | - மேற்படி - |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 94(1) இன் பிரகாரம் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது எனினும், இரண்டு செலவு விடயங்கள் தொடர்பாக தேறிய ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 1,396,421 தொகை பொறுப்புக்களுக்கு கடப்பாடுகள் ஏற்படுத்தியிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அமைச்சின் கீழ் காணப்படும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அனுப்பப்பட்ட பொறுப்புக்கள் இதன் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நி.பி. 94(1) இன் பிரகாரம் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தக் கூடாது. |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 702(3) | அமைச்சினால் கையொப்பம் இடப்படுகின்ற அனைத்து ஒப்பந்த உடன்படிக்கைகள் மூன்று பிரதிகளுடன் கையொப்பமிடப்பட்டு அதில் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்த கடப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக அந்த கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரதி ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம் இலங்கை காணிகள் மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களினால் ஏற்படுத்தியிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. அந்த உடன்படிக்கைகளை அந்த நிறுவனங்களில் இருந்து பரிசோதனை மேற்கொள்ள முடியும். | நிதிப் பிரமாண்ங்களின் படி ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் டீஎம்எ/எஸ்பீ/2015/01 இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை | அமைச்சு மற்றும் செயற்திட்ட அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. | 2021.06.11 திகதி கணிப்பீட்டு சபை நியமனம் செய்யப்பட்டு அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான கணிப்பீடு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு தற்போது அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | இலக்கம் 30/2016 மற்றும் 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்திகள் 3.1 மற்றும் 3.3 | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை முறைப்பிரகாரம் நடாத்தப்படாததுடன் மாதாந்த போக்குவரத்துச் சேவைக் குறிப்பு அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் | 03 தேக்க வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மீதியான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எவற்றிற்காகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. மாதாந்த போக்குவரத்துச் சேவை பதிவொன்று பேணிச் செல்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 திசெம்பர் 17 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி பெருநகர் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் வான் நகர அபிவிருத்தி செயற்திட்டம் மேற்கத்திய, மேற்கத்திய வலைய திட்டமிடல் செயற்திட்டம், சமுத்திர நகர அபிவிருத்தி செயற்திட்டம், தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் என்பவற்றிற்காக செயற்திட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டு அந்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு பெருநகர் அதிகார சபை நிறுவப்பட்டு சட்டரீதியாக்கப்பட்ட பின்னர் அந்த அலுவலகத்தை அந்த அதிகார சபைக்கு சாட்டுதல் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந்த செயற்திட்ட அலுவலகங்கள் 2020 ஒக்தோபர் 08 திகதி மூடப்பட்டு அவற்றின் பணிப் பொறுப்புக்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டுதல் செய்வதற்காக 2020 ஜூலை 24 திகதி அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெருநகர அதிகார சபை நிறுவுவதற்காக அமைச்சினால் 2020 செப்தம்பர் 30 திகதி வரை ரூபா 1,521,184 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அதிகார சபை | 2015 நவம்பர் 30 திகதிய 15/1853/724/018 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அப்போது காணப்பட்ட பெருநகர் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் அந்த செயற்திட்ட அலுவலகம் நிறுவப்பட்டிருந்தது. அந்த செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் அவ்வவ் விடயப்பரப்புகளின் கீழ் செயற்பட்டிருந்ததுடன், புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தவுடன் அந்த செயற்திட்டங்களுக்குரிய விடயங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டப்பட்டு குறிப்பிட்ட அலுவலகங்களை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்கள் குறிப்பிட்ட கால வரையறையில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்க்கும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவப்பட்டிருக்காமையால் அந்த செலவுகள் பயனற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | | |
| (ஆ) | கொழும்பு நகரத்தின் பிரதான பாதைகளில் காணப்படும் மிகையான போக்குவரத்து நெரிசல்களுக்காக நீண்டகால தீர்வு ஒன்றாக தூண்களின் மேல் ஓடக்கூடிய எடை குறைந்த புகையிரத இடப் பெயர்வு முறைமை வலையமைபொன்று நிறுவுவதற்காக ஜப்பான் உதவியை பயன்படுத்தி 2017 மே 01 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 இறுதயளவில் இச் செயற்திட்டத்திற்காக JICA நிதியத்தில் இருந்து ரூபா 4,622.45 மில்லியன் தொகையும் திறைசேரி ஏற்பாடுகளில் இருந்து ரூபா 923.18 மில்லியன் தொகையும் ஆக ரூபா 5,545.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் விலை கூடிய மற்றும் கிரயம் ஆக்கபூர்வமற்ற காரணத்தினால் செயற்திட்ட அலுவலகத்தை மூடிவிட்டு செயற்திட்டத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு அல்லது போக்குவரத்து அமைச்சிற்கு சாட்டுதல் மேற்கொள்வதற்காக 2020 ஒக்தோபர் 06 திகதிய அமப/20/1450/312/002 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவித்திருந்தமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் பலனற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | - மேற்படி - |
| (இ) | கொள்ளுப்பிட்டியில் இருந்து தெஹிவல வாய்க்காள் வரை உத்தேசித்த பொழுதுபோக்கிற்கான கரையோரம் நிர்மாணித்தல், உத்தேசித்த துறைமுகம்சார் செயற்பாடுகள், முதலை வாய்க்காள் (புலுமெண்டல்) | இரண்டாவது ஆக்கக்கூறின் புலுமெண்டல் குப்பை செயற்களம் சார் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை மாத்திரம் செயற்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்துடன், முன்றாவது ஆக்கக்கூற்றினை வத்தளை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் உத்தேசித்த வழங்கல் சேவை நிலையம் நிர்மாணித்தல் ஆகிய 03 அடிப்படை ஆக்கக்கூறுகள் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்காக மேற்கத்திய வலய சமுத்திரம் சார் நகர அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்து. 2020 ஒக்தோபர் வரை இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 170,388,967 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் துறைமுகச் சார் வழங்கல் சேவைகளுக்காக ப்லுமென்டல் சார் பிரதேசங்களில் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் மற்றும் உத்தேசித்த வெளிசர வழங்கல் சேவை நிலையம் நிர்மாணிக்கும் செயற்திட்டங்கள் என்பன கைவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது, இந்த செயற்திட்டம் 2020 ஆகஸ்ட் 10 திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. | அபிவிருத்தி திட்டத்துடன் உட்படுத்தி செயற்படுத்துவதற்காக பூர்வாங்க ஆய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாலபே, ஹோமாகம, கடுவெல, அத்துருகிரிய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் 05 வலையங்களாக வேறாக்கி அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், இது 2017 மார்ச் 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 மார்ச் 01 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2020 ஆண்டின் போது ரூபா 238.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அந்த செயற்திட்டத்தில் ஒரு ஆக்கக்கூறான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தலின் கீழ் 04 பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக நிறுவப்பட்டிருந்த செயற்திட்ட முகாமைத்துவ அலகின் பதவியணி சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | இந்த செயற்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்காக 04 பாதைகள் அபிவித்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

என 2017 முதல் 2020 திசெம்பர் 31 இறுதி வரை ரூபா 146,215,139 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2020 செப்தம்பர் 31 திகதி இந்த செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் 2021 ஒக்தோபர் 30 திகதி வரை அச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டம்<br><br>269 ஹெக்டயர்களுக்கான சமுத்திரம் சார் நிலப்பரப்பினை மீட்பு செய்து கொழும்பு துறைமுக நகரம் நிர்மாணிப்பதற்கும் அந்த வேலைகள் 2016 ஜனவரி 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 திசெம்பர் 31 பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>2020 திசெம்பர் 31 திகதி அளவில் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ரூபா 6,853.04 மில்லியன் தொகையும் செயற்திட்ட அலுவலகத்தின் பராமரிப்புக்காக ரூபா 228.7 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. 2020 ஆண்டின் போது இந்த செயற்திட்டத்தின் தென்மேற்கு கழிவுநீர் போக்குவரத்து முறைமையின் 33 சதவீத அளவு நிர்மாணிப்பதற்காக ரூபா 141.07 மில்லியன் தொகையும் வடக்கு கழிவுநீர் போக்குவரத்து முறைமையின் 11 சதவீதம் அளவு நிர்மாணிப்பதற்காக ரூபா 162 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் அதன் | 2018 மே 18 திகதிய 18/0826/726/035 இலக்கம் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது கழிவு நீர் வெளியேற்றச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த இரண்டு செயற்திட்டங்களும் மாநகர சபையினால் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கு தேவையான ஏற்பாடுகள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினூடாக கொழும்பு மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும், இந்த இரண்டு செயற்திட்டங்களும் நிர்மாண வேலைகள் மிகவும் குறைந்த அளவிலே நடைபெற்றிருந்ததுடன், அடிப்படை நிர்வாக திட்டமிடல் மற்றும் டென்டர் செயற்பாடுகள் தாமதம் அடைதல் மற்றும் மேலதிக ஏற்பாடுகள் தேவைப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தது. இதற்காக மீண்டும் அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று தேவைப்படுவதுடன், அந்த | அமைச்சரவை அங்கீகாரத்தை விரைவாக பெற்று செயற்திட்ட அலுவல்களை விரைவு படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதி முன்னேற்றம் முறையே 45 சதவீதம் மற்றும் 31 சதவீதமாகும். அதேபோல் பௌதீக முன்னேற்றம் முறையே 16 சதவீதம் மற்றும் 3.3 சதவீதம் ஆன குறைந்த பெறுமதி ஒன்று என அவதானிக்கப்பட்டது. | அங்கீகாரம் இதுவரை கிடைகாமையால் இந்த இரண்டு செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகளும் 2020 ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருந்தன. இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | அருவக்காலு திண்மக் கழிவுக் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம்<br>----------------------------------------------------------<br>அருவக்காலு திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் தரை நிரப்பும் நிர்மாண வேலைகள் 2018 ஜனவரி 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 ஜுன் 30 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்காக உத்தேசித்திருந்த போதிலும் 05 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டதுடன் அந்த கருமங்களுக்காக ரூபா 13,646 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 79 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக 34 கொள்கள வெகன்கள் பெறுகை செய்வதற்கான உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்தமையால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. 94 கொள்களன் பெட்டிகள் 2020 ஆண்டிறுதியில் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் பெட்டியை தடுத்து வைப்பதற்கு கூடிய பொருத்தமான இடமொன்று ஒதுக்கப்பட்டிருக்காமையால் அவற்றின் வழங்கலை தாமதிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. 04 புகையிரத எஞ்சின் தொகுதிகள் 2019 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 8,271,224 தொகை செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும் குப்பை பரிமாற்ற நிலையம் நிர்மாணிப்பதின் தாமதம் காரணமாக 2020 திசெம்பர் 31 திகதி அளவிலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிப்பொறுப்புக்காக பயன்படுத்துவற்கு முடியாமல் இருந்தது. 2020 திசெம்பர் 31 திகதி | பதில் வழங்கியிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டவாறு குறிப்பிட்ட காலப்பகுதியில் உரிய இலக்குகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அளவில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 16,186 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமொன்று பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒன்பது மாகாணங்களில் நகர அபிவிருத்தி செயற்திட்டம்<br><br>அமைச்சின் 2020 முன்னேற்ற அறிக்கையின் படி பின்வரும் துணை அபிவிருத்தி செயற்திட்டங்கள் இரண்டினது குறைந்த செயலாற்றல் ஒன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (i) ரூபா 5.74 மில்லியனிற்கான மதிப்பீட்டு பெறுமதிக்கு 2019 ஜூலை 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த துனுவில மத்திய கண்டி சந்தகிரி தபோஷன பிரிவெனா கட்டடம் நிர்மாணிக்கும் விடயத்தில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2.64 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பெற்றிருந்த பௌதீக முன்னேற்றம் 45 சதவீதம் ஆகும். | ஒப்பந்தக்காரரின் பலவீன செயலாற்றலினால் இடைவெளியில் ஒப்பந்த வேலை முடிவுறுத்த நேரிட்டது. மீண்டும் ஒப்பந்தக் காரரை தெரிவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) கடுபெத்த புதிய மத்திய சந்தை நிர்மாணிக்கும் வேலை 2019 ஜூலை 15 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 செப்தம்பர் 30 திகதி வேலைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும் அதற்காக மொத்த ஏற்பாடுகளான ரூபா 166.27 மில்லியன் நூற்றுக்கு நூறு பகுதியும் செயலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக முன்னேற்றம் 29 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் மழை காரணமாக குறிப்பிட்ட தினத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது 2021 திசெம்பர் 31 திகதி அளவில் செயற்திட்டத்தின் அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

| | | |
|---|---|---|
| (ஆ) கிரீன் ஆகேட் மத்திய வருமான வீடமைப்பு செயற்திட்டம்<br><br>2017 ஒக்தோபர் 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 09 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 4,117.09 மில்லியன் தொகைக்கான இந்த வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக 2020 ஆண்டிற்கான ஏற்பாடுகள் ரூபா 16 மில்லியன் தொகையில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 15.5 மில்லியன் தொகை (97%) செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 58 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. | இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரினால் 100% பணம் செலவிடப்பட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்து 06 மாதங்களில் தீர்க்கும் அடிப்படையில் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆண்டின் போது இச் செயற்திட்டத்திற்கான உசாத்துணை மற்றும் ஏனைய செலவுகளுக்காக மாத்திரம் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

## 3.4 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அருவக்காலு திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்தில் குப்பை பரிமாற்ற நிலையம், புகையிரதப் பாதைகள் மற்றும் குப்பைத் தேக்கங்கள் நிர்மாணிக்கும் விடயத்திற்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யும் போது அரசாங்க மற்றும் உலக வங்கி பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் படி உலக வங்கி மீளாய்வுக் குழுவினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற காரணத்தை காட்டி பெறுகை நடவடிக்கைகள் மீண்டும் மேற்கொள்ளப்படாமையால் உலக வங்கியினால் இணங்கியிருந்த 700,000 அமெரிக்க டொலர் உலக வங்கி உதவி நிதியை இழந்துள்ளது. அதன் காரணமாக இந்த செயற்திட்டம் ரூபா 19.127 மில்லியன் தொகைக்காக உள்நாட்டு நிதியத்தில் இருந்து | பதில் வழங்கியிருக்கவில்லை. | அரச வளங்கள் பாதுகாப்பாக பொதுமக்களுக்கு உச்சமட்ட பயனொன்று பெறக்கூடியவாறு பெறுகைச் செயற்பாடுகளை செயற்படுத்தி பணம் பயன்படுத்தப்பட வேண்டும். |

மேற்கொள்ள நேரிட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 16,186 மில்லியன் டொலர்களுக்கான செலவொன்று அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெருநகர் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படும் சமூக மற்றும் பொருளாதார பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தும் விளம்பர நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்துவதற்காக 2019 ஆண்டின் போது இரண்டு தனியார் நிறுவனங்களுடன் ரூபா 148,680,879 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், பொதுமக்களை அறிவுறுத்துவதற்கு பதிலாக ''பன்னரய'' எனும் கருப்பொருளின் கீழ் நாட்டிலிருக்கும் ஒவ்வொரு திறந் தொழில்களிலும் ஈடுபடும் திறன்தொழிலாளர்களின் புகைப்படத்துடனான கண்காட்சி பலகைகள் காட்சிப்படுத்துவதற்காக மற்றும் அது தொடர்பாக தொலைக்காட்சி விளம்பர அறிவித்தல்கள் சமர்ப்பித்தல் போன்ற கருமங்களுக்காக பணம் செலவிடப்பட்டிருந்தமையால் இந்த செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்த தொகையில் பொதுமக்களுக்கு நலன்கள் ஏதும் கிடைத்திருக்கவில்லை. இந்த விளம்பர அறிவித்தலுக்காக ரூபா 53,899,098 இற்கான தொகையொன்று 2020 திசெம்பர் 31 திகதி அளவிலும் குறிப்பிட்ட நிறுவுனங்களுக்கு செலுத் வேண்டிக் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. இந்த விளம்பரச் | புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் குற்றப் புலணாய்வு திணைக்களத்தினால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சிக்கமனமான முறையில் பொதுமக்களின் பணம் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு சிக்கனமற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் தியவன்னா ஓயாவை விரிவாக்குவதற்காக தேவையான காணிகள் மாத்திரம் உரித்தாக்கல், உரித்தாக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டுத் தொகையை மதிப்பீடு செய்தல் மற்றும் நட்டஈடு செலுத்துவதை விரைவுபடுத்தல் ஆகிய விடயங்களுக்காக உரிய நிறுவனங்கள் போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக உரித்தாக்கப்பட்டிருந்த ஒரு காணியின் உரிமையை கோறியிருந்த வெளிநாட்டுக் கம்பனி ஒன்றின் நட்டஈட்டுத் தொகை செலுத்துவதில் தாமதத்தின் காரணமாக முதலீட்டு சிக்கல்களை தீர்ப்பதற்கான சர்வதேச நிலையத்தில் இலங்கை அரசிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தாக்கதல் செய்யப்பட்ட வழக்கிற்காக வெளிநாட்டு சட்ட ஆலோசர்களின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் அதற்கு முன்வந்துள்ள சட்ட அதிபர் திணைக்கள உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாணங்களுக்காக மீளாய்வாண்டு (2020) இறுதி வரை அமைச்சினால் ரூபா 342,979,860 இற்கான தொகை ஒன்று சிக்கனமற்ற முறையில் செலவிடப்பட்டிருந்தது. எனினும் இதுவரை இந்த வழக்கு விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | அரச வளங்களை பாதுகாத்து விரயங்களை தடுத்து உரித்தாக்கப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பீடு செய்தல் மற்றும் நட்டஈடு வழங்கலில் தாமதத்தை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெருநகர் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சிற்கு உரிமையாக காணப்பட்ட 09 வாகனங்கள் புதிய அமைச்சு ஆரம்பிக்கப்பட்டவுடன் ஏனைய நிறுவனங்களுக்கு சாட்டுவதற்கு | இந்த வாகனங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணக் கோவையின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுமக்களின் ஆதனங்களை சாட்டுதல்கள் செய்யும் அலுவல்கள் நி.பி. பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

நடவடிக்கை எடுத்திருந்ததுடன், 02 வாகனங்கள் ஏனைய நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சாட்டுதல் நடவடிக்கைகள் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டப்பட்டிருந்த நிதிப் பிரமானக் கோவையின் 11 பகுதியின் 8 பந்தியின் அறிவுரைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 கருத்து முரண்பாட்டுத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எடை குறைந்த புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டம் நிறுத்தப்பட்டமையால் வெளிநாட்டு உசாத்துணை கம்பனியினால் மீளாய்வாண்டு இறுதி அளவில் தமக்கு ஏற்பட்டிருக்கும் 23.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான நட்டத்துடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை 31.36 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என அறிவித்திருந்ததுடன் இந்தத் தொகையை குறைப்பதற்காக கலந்துரையாடுவதற்கு 11 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று 2021 பெப்ரவரி 23 திகதிய மற்றும் அமப/21/0221/306/015 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி நியமனம் செய்யப்பட்டிருந்தது. எனினும், 2021 ஜூலை இறுதி வரை இந்தக் குழுவினால் உரிய பரிந்துரைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. இவ்வாறான தாமதங்களின் காரணமாக உசாத்துணை சேவை உடன்படிக்கையின் பொது நிபந்தனை இலக்கம் 6.6 இன் படி செலுத்த வேண்டிய தொகைக்கு மேலதிகமாக வட்டி ஒன்று செலுத்த நேரிடும் என அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | அரச வளங்கள் மற்றும் பொது மக்களின் ஆதனங்கள் பாதுகாப்பதற்கான பொறுப்புகள் சாட்டப்படும் தரப்பினரால் குழுவின் பரிந்துரையை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கடன் உடன்படிக்கை தொடர்ந்தும் செயற்படாமையால் இந்தத் தொகையை செலுத்துதல் தொடர்பாக கருத்து முரண்பாட்டு நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 3.8 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அருவக்காலு திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 34 கொள்களப் போக்குவரத்து வண்டிகள் பெறுகைக்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த நிரந்தர பெறுகைக் குழுவினால் உள்நாட்டு நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப விலைகூறலில் வழுக்கல் காணப்பட்டமையால் இரத்துச் செய்யப்பட்ட விலைகூறல்தாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடு தொடர்பாக மேன்முறையீட்டு சபை மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் கவனம் செலுத்திய பின்னர் அந்த கேள்வியினை இந்தியன் கம்பனிக்கு வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2019/என்சீ/05 இலக்கம் கொண்ட மற்றும் 2019 ஜுலை 10 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி உள்நாட்டுத் துறைகளுக்காக முக்கியத்துவம் வழங்குதல், செலாவணித் தளம்பளின் காரணமாக உள்நாட்டு கம்பனிகளை தெரிவு செய்யும் போது அரசுக்கு ரூபா 37,430,634 இற்கான நிதி இலாபம் ஒன்று ஏற்படுதல் மற்றும் இந்தியன் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த | பதில் வழங்கியிருக்கவில்லை. | அரசாங்க வளங்களை பாதுகாப்பதற்காக ஆக்கத் திறனுடன் செயற்பட்டு பெறுகை மற்றும் மதிப்பாய்வு அலுவல்கள் குறிப்பிட்ட பிரமாணங்களின் படி வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொழில்நுட்ப விலைகூறலின் வழுக்கல் காணப்படுவதனால் மதிப்பீடு செய்யும் போது இரத்துச் செய்யப்படல் ஆகிய காரணங்களினால் குறிப்பிட்ட விலைகூறல்தாரர் இரத்துச் செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மேன்முறையீட்டுச் சபை மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு வழங்கியிருந்த பரிந்துரைக்கு மதிப்பளித்து கொள்களன் போக்குவரத்து வண்டி பெறுகை கட்டளை குறிப்பிட்ட இந்தியா கம்பனிக்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கேட்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கட்டளை 2,373,200 அ.டொ. (ரூபா 105,638,000) தொகை 2019 ஆகஸ்ட் 05 திகதி குறிப்பிட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.
எவ்வாறாயினும், விலைகூறல் ஆவணங்களின் படி உற்பத்தியாளரால் போக்குவரத்து வண்டிகள் உற்பத்தியினை ஆரம்பிப்பதற்காக முன் கருத்துரு வரைபுகள் புகையிரத திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அந்தக் கம்பனியினால் பல தடவைகளில் சமர்ப்பித்திருந்த கருத்துரு வரைபுகளின் பொருத்தமின்மை காரணமாக புகையிரத திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக குறிப்பிட்ட கொள்களன் வெகன்களை உற்பத்தி செய்து அனுப்புவதற்கு இணங்கியிருந்த திகதி முடிவடைந்திருந்தது. இதன் காரணமாக அந்த கம்பனியுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3.9 ஏனைய அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேற்கத்திய வலய பெருநகர் திட்டமிடும் செயற்திட்டம் 2015 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 2017 செப்தம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 330,226,769 தொகையாக காணப்பட்டது. எவ்வாறாயினும் 2018 ஆண்டு முதல் 2020 செப்தம்பர் 30 வரை ரூபா 38,351,301 தொகை செயற்திட்ட பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கத்திய வலைய திட்டமிடல் செயற்திட்டத்தை என்ற பெயரில் புதிய செயற்திட்டம் ஒன்று என பழைய செயற்திட்டமே முன்னெடுத்து செல்லப்பட்டிருந்ததுடன், 2020 செப்தம்பர் 30 திகதி இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் படி இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. செயற்திட்டத்தின் பணிப்பொறுப்புக்கள் முடிவடைந்த பின்னர் சிறிய பதவியணி ஒன்று மூலம் இனங்காணப்பட்ட செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கான உதவி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தையும் பூர்த்தி செய்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பணிப்பொறுப்பு பூர்த்தி செய்தவுடனேயே செயற்திட்ட அலுவலகத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாரிய கொழும்பு திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் பிரதான நிலைபேறான அபிவிருத்தி இலக்காகிய நகர மற்றும் ஏனைய கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக விஷேட கவனம் செலுத்தப்படுவதுடன் நகரங்களில் பிரதிகூலமான தனிநபர் சுற்றாடல் தாக்கங்களை குறைப்பதற்காக 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 16,186.34 மில்லியன் தொகை | பதில் வழங்கியிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு குறிப்பிட்ட காலப்பகுதியில் உரிய இலக்குகளை பெற்றுக்கொண்டு பொதுமக்களின் ஆதனங்களை பாதுகாக்க வேண்டும். |

செலவிடப்பட்டிருந்து. எனினும், அந்த செயற்திட்டத்தின் தாமதமான செயலாற்றல் காரணமாக 2020 ஆண்டின் போதும் இந்த இலக்கினை நோக்கி நெருங்குவதற்கு குறிப்பிட்ட செயற்திட்டத்திற்கு முடியாமல் இருந்தது.